**செய்தி வெளியீடு எண்: 206** **நாள்: 24.03.2018**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (24.3.2018) முகாம் அலுவலகத்தில், "உலக காசநோய் தினத்தை" முன்னிட்டு, காசநோய் தடுப்புப் பிரிவு முதுநிலை சிகிச்சை மேற்பார்வையாளர்கள் மற்றும் முதுநிலை காசநோய் ஆய்வுக்கூட மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கு கையடக்கக் கணினிகள் வழங்கும் திட்டம், காசநோயாளிகளுக்கு மாதம் 500 ரூபாய் உதவித் தொகை வழங்கும் திட்டம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் ரீச் (REACH) என்னும் தொண்டு நிறுவனம் மற்றும் NIRT (National Institute for Research in TB) இணைந்து நிறுவியுள்ள 35 நக்ஷத்ரா மையங்கள் ஆகியவற்றை துவக்கி வைத்தார்கள். மேலும், காசநோய் கண்டறியும் அதிநவீன கருவியுடன் கூடிய இரண்டு வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த மருத்துவ விஞ்ஞானி டாக்டர் இராபர்ட் கொச் அவர்கள், 1882–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24–ஆம் நாள் காசநோய் கிருமியைக் கண்டறிந்து உலகிற்கு அறிவித்தார். இந்நோயைக் கண்டுபிடித்து நூறு ஆண்டுகள் 1982–ஆம் ஆண்டில் நிறைவு பெற்றதை ஒட்டி, ஒவ்வொரு ஆண்டும் உலக காசநோய் தினம், மார்ச் 24–ஆம் நாளன்று அனுசரிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், உலக காசநோய் தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

உலக சுகாதார நிறுவனம், உலகளவில் 2030–ஆம் ஆண்டிற்குள் காசநோயைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று அறிவித்துள்ளது. இந்தியாவில் இக்குறிக்கோளை 2025–ஆம் ஆண்டிற்குள் அடைய முழு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசும், குறிப்பிட்ட இலக்கு காலத்திற்கு முன்னதாகவே காசநோயை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மத்திய காசநோய் பிரிவின் சார்பில் தமிழகத்தில் காசநோய்த் தடுப்புப் பிரிவில் பணியாற்றும் 1412 முதுநிலை சிகிச்சை மேற்பார்வையாளர்கள் மற்றும் முதுநிலை காசநோய் ஆய்வுக்கூட மேற்பார்வையாளர்களுக்கு கையடக்கக் கணினிகள் வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள். இக்கணினி மூலம் காசநோயாளிகளின் விவரங்கள், அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள், மருந்துகள் போன்ற விவரங்கள் உடனுக்குடன் நிக்ஷை (NIKSHAY) செயலி மூலம் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு, எளிதாக காசநோயாளிகளை கண்காணிக்க முடியும்.

மத்திய அரசின் 2018–19ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், காசநோயாளிகளுக்கு மாதந்தோறும் 500 ரூபாய் உதவித் தொகை வழங்கும் திட்டம்

அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தமிழகத்திலுள்ள காசநோயாளிகளுக்கு அவர்களது சிகிச்சை காலங்களில் மாதம் 500 ரூபாய் உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று காசநோயாளிகளுக்கு உதவித்தொகை வழங்கி துவக்கி வைத்தார்கள். தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் வரும் ஏப்ரல் மாதம் முதல் இந்தத் தொகை காசநோயாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

காசநோய் இல்லா சென்னையை உருவாக்க, பெருநகர சென்னை மாநகராட்சியும், ரீச் (REACH) எனும் தன்னார்வ தொண்டு நிறுவனமும் இணைந்து, சென்னையில் நிறுவியுள்ள 35 நக்ஷத்ரா மையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள். இம்மையங்கள், அரசுக்கு அறிவிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவரும் காசநோயாளிகளின் சிகிச்சைகளை கண்காணிக்கும்.

மத்திய காசநோய் பிரிவு தமிழ்நாட்டிற்கு வழங்கியுள்ள காசநோயைக் கண்டறியும் CBNAAT எனும் அதிநவீன கருவியுடன் கூடிய இரண்டு நடமாடும் வாகனங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று கொடி அசைத்து துவக்கி வைத்தார்கள்.

அப்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் பேசியதாவது:

உலக காசநோய் தின நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுள்ள மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய சுகாதார துறை செயலாளர் அவர்களுக்கும் மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற டாக்டர் நளினிகிருஷ்ணன் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ரம்யா அவர்களுக்கும், மரியாதைக்குரிய டாக்டர் ராதா அவர்களுக்கும் மற்றும் டாக்டர் ராஜாமகேந்திரன் அவர்களுக்கும், இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற பல்வேறு தனியார் மருத்துவமனைகளைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கும், அரசு அலுவலர்களுக்கும், வருகை தந்துள்ள ஊடக மற்றும் பத்திரிகை நண்பர்களுக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும், உலக காசநோய் தினம் மார்ச் 24ஆம் தேதி அன்று அனுசரிக்கப்படுகிறது.

அந்த வகையில், உலக காசநோய் தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு காசநோய் தினத்தின் வாசகம், ‘‘காசநோய் இல்லா உலகம் – தலைவர்கள் தேவை’’ (Wanted Leaders for TB free world) என்பதாகும். இதனையொட்டி, காசநோய் கண்டறியும் அதிநவீன கருவியுடன் பொருத்தப்பட்ட 2 வாகனம் தமிழ்நாடு அரசின் சார்பாக இன்று துவக்கி வைக்கப்படுகிறது.

இதன்மூலமாக, இந்த நடமாடும் வாகனங்கள், எல்லா பகுதிகளுக்கும் செல்கின்றபோது, அந்த பகுதியிலே காசநோயால் பாதிக்கப்பட்டவர்களை அவர்கள் இந்த அதிநவீன வாகனத்தில் பொருத்தப்பட்ட கருவிகளுடன் அவர்களுக்கு நோயுடைய தன்மை அறிந்து, குணப்படுத்துவதற்கு ஏதுவாக அமையும் என்பதன் காரணத்தினாலே, நோயுற்றவர்களை தேடி, இந்த வாகனமே சென்று, அவர்களுக்கு நோயை கண்டறிந்து குணப்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலையை அரசு ஏற்பாடு செய்திருக்கின்றது. அதேபோல, கிராமப்புறத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள், அவர்கள் சாதாரண குடும்பத்திலே பிறந்து வாழ்ந்த காரணத்தினாலே, இந்த காசநோயால் பாதிக்கப்படுகின்ற போது, அதற்கு தேவையான மாத்திரைகள் வாங்கி அவர்கள் உட்கொள்ள வேண்டும். பொருளாதார சூழ்நிலை காரணமாக அதை வாங்க முடியாத சூழ்நிலை இருக்கின்றவர்களுக்கு, அந்த நோயாளிகளுக்கு உழவர் பாதுகாப்பு அட்டையின் மூலமாக மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோல, 2018–19ஆம் ஆண்டு மத்திய நிதிநிலை அறிக்கையிலே இந்த காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதந்தோறும் 500 ரூபாய் வழங்கப்படும் என்ற அறிவிப்பினை மத்திய அரசு அறிவித்திருக்கிறது. அதையும், அவர்களுக்கு வங்கி மூலமாக நேரடியாக போய் சேர்வதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அதேபோல இன்றைக்கு, உலகளவிலேயே 2030ஆம் ஆண்டுக்குள் காசநோய் இல்லாத உலகத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற இலக்கை நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், 2025–க்குள் இந்தியாவில் காசநோய் இல்லாத இந்தியாவாக உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு தமிழ்நாடு அரசு முழு ஒத்துழைப்பை நல்கி, அதை நிறைவேற்றப்படும் என்பதை இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல, REACH Foundation மற்றும் இங்கே பல்வேறு தனியார் மருத்துவமனைகளை சேர்ந்தவர்களும் இதிலே பங்கு பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு மனமார்ந்த எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஏனென்றால், காசநோய் குணப்படுத்துகின்ற ஒரு நோய். அதை உரிய முறையிலே சிகிச்சை எடுத்துக் கொண்டால் நிச்சயம் பரிபூரண குணமடையலாம். ஆகவே, அரசாங்கம் மட்டுமல்ல, இங்கே வருகை தந்திருக்கின்ற முக்கிய மருத்துவமனை நிர்வாகிகளும், தங்களை ஈடுபடுத்திக் கொண்டு இந்த காசநோயால் பாதிக்கப்பட்டவர்களை இலவசமாக தங்கள் மருத்துவமனையிலே பரிசோதனை செய்து, குணப்படுத்தி கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் இந்த தருணத்திலே தெரிவித்துக் கொண்டு, இன்றைக்கு தமிழ்நாட்டை பொறுத்தவரை மக்கள் சுபிட்சமாக வாழ வேண்டும், சுகாதாரமாக வாழ வேண்டும், நோயற்ற வாழ்வு வாழ வேண்டும் என்று, கருத்திலே கொண்டு, பல்வேறு அடிப்படைகளை இன்றைக்கு செய்து வந்து கொண்டு இருப்பதை, இந்த நேரத்திலே

சுட்டிக்காட்டி, நம்முடைய பெரியவர்கள் குறிப்பிடுவார்கள் ‘‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’’ என்று சொல்வார்கள். எவ்வளவு தான் செல்வம் இருந்தாலும், நோயில்லாமல் இருந்தால் தான், மனித வாழ்க்கை வாழ முடியும். ஆகவே, அப்படி ஒரு நோயற்ற வாழ்வை தமிழகத்திலே உருவாக்கி தருவதற்கு அம்மாவுடைய அரசு தொடர்ந்து பாடுபடும் அதற்கு தேவையான நடவடிக்கை சுகாதாரத்துறை மூலமாக எடுக்கப்படும் என்ற செய்தியை தெரிவித்து, இங்கே அதிநவீன கருவி பொருத்தப்பட்ட இரண்டு வாகனத்தை அனைவருடைய சார்பாகவும் நான் துவக்கி வைக்கின்றேன் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., மாநில காசநோய் அலுவலர் (பொறுப்பு) டாக்டர் கே.செந்தில்ராஜ் இ.ஆ.ப., மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் டாக்டர் இன்பசேகரன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் டாக்டர் கே. குழந்தைசாமி, தேசிய காசநோய் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் ஸ்ரீகாந்த் திரிபாதி, சுகம் மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் டாக்டர் சத்தியகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 24.3.2018**